# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 04 செவ்வாய்க்கிழமை 19.11.2024 கதிர் 422







# இலங்கையின் பத்தாவது நாடாளுமன்றின் சபைத்தலைவராக பிமல் ரத்நாயக்க நியமனம்!

## பிரதம கொறடாவானார் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினது இலங்கையின் பத்தாவது நாடாளுமன்றின் சபைத்தலைவராக அமைச்சர் பிமல் ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலை, துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரான பிமல் ரத்நாயக்க இன்று இடம்பெற்ற புதிய அமைச்சரவையின் முதலாவது கூட்டத்தின்போது இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கூட்டத்தின்போது அரசாங்கத்தின பிரதம கொறடாவாக அமைச்சர் டொக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ நிமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கையின் நாடாளுமன்றம் தனது முதல் பார்வையற்ற நாடாளுமன்ற உறுப்பினர் சுகத் வசந்த டி சில்வாவின் மன்ற நடவடிக்கைகளுக்கு ஏற்ற வகையில் விசேட நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியல் மூலம் நியமிக்கப்பட்ட 2➤



# யாழ் சித்த மருத்துவ பீடாதிபதியாக திருமதி விவியன் சத்தியசீலன் தெரிவு!



யாழ்ப்பாணப்பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடத்தின் பீடாதிபதியாக சித்த வைத்தியக் கலாநிதி திருமதி விவியன் சத்தியசீலன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்று 18 ஆம் திகதி திங்கட் கிழமை இடம்பெற்ற சித்த மருத்துவ பீடச்சபைக் கூட்டத்தில் நடாத்தப்பட்ட பீடாதிபதி தெரிவின் போது 4 மேலதிக வாக்குகளைப் பெற்று கலாநிதி திருமதி விவியன் சத்தியசீலன் பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக கழகத்தில் இதுவரை காலமும் சித்த மருத்துவ அலகாகச் செயற்பட்டு வந்த சித்த மருத்துவ கற்கை அலகு கடந்த ஜூலை 26 ஆம் திகதி பீடமாகத் தரமுயர்த்தப்பட்டது.

சித்த மருத்துவ பீடத்தில் நஞ்சியல் மற்றும் பரம்பரை மருத்துவம், மனித உயிரியல், சமூகநல மருத்துவம், சிரோ ரோகமும்அறுவை மருத்துவமும், நோய்நாடல்சிகிச்சை, குணபாடம், மூலதத்துவம், குழந்தை மற்றும் மகளிர் மருத்துவம் ஆகிய கற்றல் துறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சித்த மருத்துவ அலகு 2➤

# கற்கோவளம் இராணுவ முகாமை 14 நாட்களுக்குள் அகற்ற உத்தரவு

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை கற்கோவளம் இராணுவ முகாமை 14 நாட்களுக்குள் அகற்றி, குறித்த முகாம் அமைக்கப்பட்டிருந்த காணிகளை காணி உரிமையாளர்களிடம் ஒப்படைக்குமாறு இராணுவத் தலைமையகம் அறிவிததுள்ளது.

மூவருக்குச் சொந்தமான மூன்று ஏக்கர் காணித் தொகுதியே இவ்வாறு விடுவிக்க 2➤



# புதிய அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சுக்கள் இல்லை! அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவையில் எந்தவொரு இராஜாங்க அமைச்சரும் நியமிக்கப்பட மாட்டார்கள் என சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டொக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அடுத்த ஓரிரு தினங்களில் 26 அல்லது 28 பிரதி 2➤

# இந்த ஆட்சி மாற்றமானது பலருக்கும் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்துள்ளது!

## சி.கா.செந்தில்வேல் சுட்டிக்காட்டு



கடந்த 77 ஆண்டுகளாக, நாடாளுமன்ற ஆட்சிக் கூடத்தில் அமர்ந்திருந்து அதிகாரம் செலுத்தி வந்த மேட்டுக்குடியைச் சேர்ந்த ஆளும் வர்க்கங்களுடைய பிரதிநிதிகளாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கும் அதன் பின் வந்த பொதுஜன பெரமுனக் கட்சிக்கும் தற்போதைய ஆட்சி மாற்றம் மிகப்பெரிய ஆச்சரியத்தைக் கொடுத்துள்ளது, என்று தெரிவித்தார் புதிய மார்க்சிச லெனின் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல்.

யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

தமிழ்த் தேசியம் பேசி மக்களை உசுப்பேத்தி, நாடாளுமன்றம் சென்று வந்தவர்களுக்கும் இந்தத் தேர்தல் நல்ல பாடத்தைப் 2➤

# அமைச்சரவைப் பேச்சாளராக நளிந்த ஜயதிஸ்ஸ நியமனம்



புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் இன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

இதன்போது புதிய அமைச்சரவையின் ஊடகப் பேச்சாளராக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டொக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்னதாக, அமைச்சர் விஜித ஹேரத் அந்தப் பொறுப்பினை வகித்திருந்தார்.

22 அமைச்சர்கள் அடங்கிய புதிய அமைச்சரவை நேற்றுக் காலை பதவிப் பிரமாணம் செய்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அநுர அரசின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எம்.பி. டி சில்வாவின் நுழைவு, நாட்டின் சட்டமன்றத் துறையில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை ஏற்படுத்தியுள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினரின் தனிப்பட்ட விசேட தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நாடாளுமன்ற செயலாளர் குஷானி ரோஹணதீர உறுதிப்படுத்தியுள்ளார்.

அறிமுகப்படுத்தப்படும் முக்கிய முன்முயற்சிகளில், நாடாளுமன்றத்தினுள் அவர் தடங்கல்களின்றி நுழைவதற்கும், வெளியே வருவதற்கும் ஏற்ற வகையில் வசதிகள் மேற்கொள்ளப்படுமென உறுதியளிக்கப்பட்டுள்ளது.

மன்றில் இடம்பெறும் வாக்கெடுப்புகளின்போது வாக்களிக்கும் நடைமுறைகள் உட்பட சட்டமன்ற நடவடிக்கைகளில் அவரது முழுப் பங்களிப்பை உறுதிசெய்யும் வகையில் தொழிநுட்ப ஏற்பர்டுகளும் மேற்கொள்ளப்படுவதாக அறியக் கிடைக்கிறது. பிரெய்லி முறையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாடாளுமன்றின்நடவடிக்கைகளில்குறித்த உறுப்பினரால் முழுமையாகப் பங்கெடுப்பதற்கான சந்தர்ப்பம் உறுதிப்படுத்தப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

விவாதங்கள், முடிவெடுத்தல் மற்றும் வாக்களிப்பு செயல்முறைகளில் திறம்பட ஈடுபடுவதற்குத் தேவையான கருவிகளை எம்.பி. டி சில்வாவுக்கு வழங்கும் பிரெய்லி அமைப்பு மற்றும் குரல் வழி ஒத்துழைப்புகள் போன்ற புதுமையான தீர்வுகளையும் நாடாளுமன்றம் ஆராய்ந்து வருகிறது.

இலங்கையின் பத்தாவது நாடாளுமன்றத்தின் ஆரம்ப அமர்வு வரும் 21 ஆம் திகதி நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமைச்சர்கள் நியமிக்கப்படுவார்கள் எனவும் அவர் கூறினார்.

தேர்தலுக்கு முன்னர் முன்வைக்கப்பட்ட விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளவாறு தமது கட்சி இராஜாங்க அமைச்சர்களை நியமிக்காது என அவர் குறிப்பிட்டார்.

சில அமைச்சரவை அமைச்சுக்களுக்கு அவசியம்கருதி இரண்டு பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்படவிருக்கின்ற போதிலும், அனைத்து அமைச்சுக்களுக்கும் பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்படப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கற்கோவளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்கமைய நேற்று (18) மாலையில் இருந்து இராணுவ முகாமை அகற்றும் பணி இடம்பெற்று வருகிறது.

குறித்த காணிகள் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கற்கோவளம் கடற்கரையுடன் அண்டிய பகுதியில் மூன்று சகோதரர்களுச் சொந்தமானவையாகும். இக்காணித் தொகுதியை இரு தடவைகள் இராணுவ முகாமுக்காக சுவீகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது அரசியல் தலைவர்கள், காணி உரிமையாளர்களுடன் இணைந்து போராடி அளவீட்டுப் பணியைத் தடுத்து நிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1995 ஆம் ஆண்டு முதல் குறித்த இராணுவ முகாம் அங்கு இயங்கிவந்திருந்தது.

## யாழ் சித்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பீடமாகத் தரமுயர்த்தப்பட்ட நாளில் இருந்து முன்னாள் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி திருமதி விவியன் சத்தியசீலன் பதில் பீடாதிபதியாகச் செயற்பட்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## இந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புகட்டி உள்ளது. தேசியங்கள் பேசி, இவர்கள் எதையும் சாதித்ததில்லை. 30 வருட யுத்தம் முடிவடைந்தாலும் இவர்கள் 40 வருடங்கள் கடந்தும் இதனையே பேசிக் கொண்டிருப்பார்கள். இவர்களுக்கு நடந்து முடிந்த யுத்தம் பேசுவதற்கு ஒரு விடயப் பொருளாகவே இருக்கின்றது. இனிவரும் சமூகம் இலங்கையில் அவ்வாறான ஒன்று நடந்ததா என்று தங்களுக்குள் கேள்வி எழுப்பிக் கொள்ளும். இனி வருங்காலங்களில் தேசியம் என்ற பேச்சு மக்கள் மத்தியில் எடுபடாத ஒன்றாகவே இருக்கும். தமிழ்த் தலைமைகள் தொடர்ந்து மக்களை ஏமாற்ற முடியாது.

வடக்கிலும் கிழக்கிலும் குருட்டு இலக்கில் சிலர் வெற்றி பெற்றுள்ளனர்.

இந்த ஆட்சி மாற்றத்திற்கு காரணமாக இருந்த ஜேவிபியும் அதனோடு அரவணைக்கப்பட்ட பல்வேறு குழுக்களும் தேசிய மக்கள் சக்தியாக உருவெடுத்து இந்த நாடாளுமன்றத்தில் 159 ஆசனங்களைப் பெற்று பெரும்பான்மையாக இருக்கின்றன.

புதிய அரசாங்கம் தமிழ் மக்களுக்குக் காத்திரமான விடயங்களைச்செய்து, கடந்த காலங்களில் பிழையோடிப் போன விடயங்களை மறந்து நல்லதைச் செய்ய வேண்டும், என அவர் தெரிவித்தார்.

# முஸ்லிம் மக்களின் உணர்வுகளைப் புரியாது அரசு செயற்படுவது கவலையைத் தருகின்றது!

## இம்ரான் எம்.பி கருத்து

(ஹஸ்பர் ஏ.எச்)

இந்த அரசாங்கம் முஸ்லிம் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாது செயற்படுவது மிகவும் கவலையைத் தருகின்றது என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ள இம்ரான் மகஷூப் தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு இன்று கருத்துத் தெரிவித்துள்ள அவர்,

முஸ்லிம் மக்களும் இந்நாட்டின் பிரசைகள். அந்த வகையில் இந்த சமூகமும் ஏனைய சமூகங்களைப் போன்று கௌரவத்துடன் இந்நாட்டில் வாழ விரும்புகின்றது. இந்நாட்டின் சுதந்திர காலம் தொட்டு நியமிக்கப்பட்டு வந்த அமைச்சரவையில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவம் இருந்து வந்துள்ளது.

இலங்கை அரசியல் வரலாற்றில் முதற்தடவையாக இந்த அரசாங்கம் நியமித்த அமைச்சரவையில் முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதித்துவம் இல்லாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதனால் நாடு முழுவதும் உள்ள முஸ்லிம் சமூகம் மிகுந்த கவலை கொண்டுள்ளது. சமூக வலைத்தளங்களை அவதானிக்கின்ற போது இதனைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

இந்த அரசாங்கத்தின் கடந்த குறுகிய கால செயற்பாடுகள் சிலவற்றை பாரக்கும் போது முஸ்லிம்கள் தொடர்பான வித்தியாசமான எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு இருக்கின்றதோ? என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற கிழக்கு மாகாணத்தில் அந்த மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்ட 6 தவிசாளர் பதவிகளில் எந்தவொரு முஸ்லிம் தவிசாளரும் நியமிக்கப்படவில்லை. இந்த விடயம் பேசு பொருளான பின்னர் ஒரு முஸ்லிம் தவிசாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோல இந்த அரசாங்கத்திற்கு கிடைக்கப்பெற்ற 18 தேசியப்பட்டியல் ஆசனங்கள் தொடர்பான பெயர்ப் பட்டியல் முன்னர் வெளியிடப்பட்ட போது எந்தவொரு முஸ்லிம் உறுப்பினரதும் பெயர் வெளிவரவில்லை. பின்னர் இதுவும் பேசுபொருளான பின்னர் ஒரு முஸ்லிம் உறுப்பினரது பெயரோடு புதிய பட்டியல் வெளியானது.

அந்த வரிசையிலேயே இப்போது இந்த அரசாங்கம் நியமித்துள்ள அமைச்சரவையில் இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லாது செய்யப்பட்டுள்ளது.

முஸ்லிம்களுக்கு எதிரான இனத்துவேசத்தை விதைத்து ஆட்சிக்கு வந்த கோட்டபாய ராஜபக்ஸ அரசாங்கத்தின் அமைச்சரவையில் கூட முஸ்லிம் பிரதிநிதித்துவம் இருந்தது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

இந்த உதாரணங்களை வைத்து நோக்கும் போது இந்த அரசாங்கத்திற்கு முஸ்லிம்கள் தொடர்பான வித்தியாசமான எண்ணம் இருப்பது போலவே எனக்குத் தோன்றுகின்றது. இப்படியிருந்தால் இந்த ஆரம்பத்திலேயே இது களையப்பட வேண்டும். இந்த அரசாங்கத்தோடு இணைந்திருக்கின்ற முஸ்லிம்கள் இந்தப் பணியைச் செய்ய வேண்டும்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் நாடளாவிய ரீதியில் அளிக்கப்பட்டுள்ள சுமார் 15 இலட்சம் முஸ்லிம் வாக்குகளுள் சுமார் 10 இலட்சம் முஸ்லிம் வாக்குகள் திசைகாட்டிக்கு அளிக்கப்பட்டுள்ளன. நாடு முழுவதும் அளிக்கப்பட்டுள்ள வாக்கு விபரங்களை நுணுகி ஆராய்கின்ற போது இந்த உண்மையை விளங்கிக் கொள்ளலாம்.

முஸ்லிம்களின் இந்தளவு பெரிய எண்ணிக்கை வாக்குகளைக் கொடுத்து உருவாக்கப்பட்ட இந்த அரசாங்கம் முஸ்லிம் மக்களின் உணர்வுகளையும் புரிந்து செயற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், என்று குறிப்பிட்டுள்ளார்.



# ரவியின் வீட்டிற்கு முன்பாக பலத்த பாதுகாப்பு

கொழும்பு, நவ. 19

புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் ரவி கருணாநாயக்கவின வீட்டிற்கு முன்பாக பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவிக்கு ரவி கருணாநாயக்கவின் பெயர் அறிவிக கப்பட்டு தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று வர்த்த மானி அறிவித்தலை வெளியிட டுள்ளது.

இந்நிலையில், அக்கட்சியின் வஜிர அபேவர்தன நேற்று ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி தேசியப்பட்டியல் நியமனம் வழமைக்கு முரணானது என தெரிவித்திருந்தார்.

இது கட்சியுடன் கலந்தாலோசிக்காமல் எடுக்கப்பட்ட முடிவு என சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், நாடாளுமன்றத்தின் தேசியப் பட்டியலில் ரவி கருணாநாயக்கவின் பெயர் உள்ளடக்கப்பட்டமை தொடர்பில் அந்த முன்னணியை பிரதிநிதித்துவப்படுத்தும் பல தரப்பினர் நேற்று ஆட்சேபனைகளை வெளியிட்டுள்ளனர்.

இதன்படி ரவி கருணாநாயக்கவின் வீடு முற்றுகையிடப்பட வேண்டும் எனவும், இந்த முடிவை மாற்றியமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே இன்றைய தினம் ஏதேனும் எதிர்ப்புகள் ஏற்படும் என்ற அச்சத்தில் ரவி கருணாநாயக்கவின் வீட்டிற்கு முன்பாக பலத்த பொலிஸ் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

(ஐ)



# ரணில் தரப்பு தேசியப் பட்டியல் விவகாரம்! இறுதி தீர்மானத்திற்கு தயாராகும் கட்சி

கொழும்பு, நவ. 19

தேசியப் பட்டியலின் ஊடாக ரவி கருணாநாயக்கவை நாடாளுமன்ற உறுப்பினராக்க எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் எமக்கு எதுவும் தெரியாது. இந்த சர்ச்சை நிலை தொடர்பில் ரணில் விக்ரமசிங்க தலைமையில் இடம்பெறும் கலந்துரையாடலின் பின்னர் இறுதி தீர்மானம் எடுக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

காலியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஐக்கிய தேசிய கட்சிக்கு தெரியாமலேயே ரவி கருணாநாயக்கவின் பெயர் தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது. சிலிண்டருக்கு உரித்தான அரசியல் கட்சியின் மூலமே அவரின் பெயர் வர்த்தமானியில் வெளியிட அனுப்பப்பட்டுள்ளதாகவே எமக்கு அறியக்கிடைத்திருக்கிறது.

புதிய ஜனநாயக கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினராக ஐக்கிய தேசிய கட்சி சார்ப்பில் தலதா அத்துகோரல அல்லது சட்டத்தரணி ரோனால் பெரேராவை நியமிக்கவே கலந்துரையாடி இருந்தோம். இதுதொடர்பில் உறுதியான தீர்மானம் எடுப்பதற்கு முன்னர் இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த நடவடிக்கை ஐக்கிய தேசிய கட்சி யாப்பின் 3 3,4 உறுப்புரைகள், 9 7ஆம் உறுப்புரை, 13 7 மற்றும் 8ஆம் உறுப்புரைகளை மீறும் நடவடிக்கையாகும். எனவே இந்த பிரச்சினை தொடர்பில் புதிய ஜனநாயக முன்னணியில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளுடன் இன்று கலந்துரையாடி இறுதி தீர்மானம் எடுக்க இருக்கிறோம்.



என்றாலும் ரவி கருணாநாயக்கவின் இந்த நியமனம் தொடர்பில் ஐக்கிய தேசிய கட்சி என்றவகையில் எமக்கு எதுவும் தெரியாது. தலதா அத்துகோரலவை தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்கு அனுப்ப வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே ஐக்கிய தேசிய கட்சி கலந்துரையாடி வந்தது. அது தொடர்பில் இன்று கலந்துரையாடி முடிவெடுப்பதற்கு இருந்த நிலையிலேயே இது நடைபெற்றுள்ளது.

என்றாலும் இந்த சர்ச்சை தொடர்பில் இன்று காலை ரணில் விக்ரமசிங்க தலைமையில் அனைத்து கட்சி பிரதானிகளுடன் இடம்பெறும் கலந்துரையாடலின் பின்னர் இறுதி தீர்மானம் அறிவிக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)




## தேசியப்பட்டியலுக்குள் உள்ளீர்ப்பதற்கு ஜீவன் ஆதரவு

கொழும்பு, நவ. 19

புதிய நாடாளுமன்றத்திற்கு எதிர்கட்சியில் அனுபவம் வாய்ந்த அரசியல்வாதிகள் தேவை என்ற அடிப்படையில், கட்சியின் எஞ்சிய தேசியப்பட்டியல் ஆசனத்திற்கு முன்னாள் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவினபெயரை பரிசீலிக்குமாறு கோரிக்கை முன்வைக் கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் ஜீவன் தொண்டமானினால் தேசிய ஜனநாயக முன்னணியிடம் இந்த கோரிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பெரும்பான்மையை கருத்தில் கொண்டு, நடந்துகொண்டிருக்கும் சீர்திருத்தங்களில் அரசாங்கத்தின் பொறுப்புக்கூறலுக்காக, அனுபவம் வாய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை எதிர்கட்சிக்கு வைத்திருப்பது முக்கியம் என்று ஜீவன் குறிப்பிட் டுள்ளார்.

எனவே, புதிய ஜனநாயக முன்னணியின் எஞ்சியிருக்கும் தேசியப்பட்டியல் ஆசனம், நாட்டின் வரலாற்றில் எரிசக்தி துறையில் கடினமான சீர்திருத்தங்களுக்கு தலைமை தாங்கிய காஞ்சன விஜேசேகரவுக்கு வழங்கப்படும் என தாம் நம்புவதாக அவர் தமது எக்ஸ் பதிவில் குறிப்பிட்டுள்ளார் .

(ஐ)

# தவமும் வாழ்க்கையும்

ஒருவனுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, உறங்க உறைவிடம் இருப்பின் அவன் அமைதியாக மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு ஏற்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கிக்கொள்ளலாம். அப்படியெனில் அவனிடம் அந்த அளவுக்கு போதுமான பணமும் பொருளும் உள்ளது என்று எடுத்துக்கொள்ளலாம். செல்போன் இல்லாமல்கூட ஒருவனால் உயிர் வாழ முடியும் ஆனால்பணம்இல்லையெனில் இந்த உலகில் ஒருவனும் வாழமுடியாது.



என் பூர்வ வினை கர்மாவின் பயனாகவோ அல்லதுகடவுளின் கருணையாலோ (எனக்கு இந்த உ உ உ உ உ உ (முதல் வரியில் இந்த உ க்களுக்கு விளக்கம் உள்ளது) ஓரளவுக்கு அமைந்துள்ளது.

(இந்த இரண்டு பிடிபடாத தத்துவங்கள், கடவுள்மற்றும்கர்மவினை, என்னை எப்போதுமே பாடாய் படுத்தி வருகிறது. எதனால் என்றால், இந்த இரண்டையுமே நம்பமுடியவில்லை, நம்பாமலும் இருக்கமுடியவில்லை. எப்படி ஒரு வாழ்க்கை துணை, இன்னொரு வாழ்க்கை துணைக்கு நல்லவராகவும் அதே நேரத்தில்



கெட்டவராகவும் இருக்கிறாரோ அதுபோல)

எனக்கு அறுபத்திஐந்து வருட வாழ்வின் அனுபவங்களும் உள்ளது. இதனுடன் அன்பும் பாசமும் உள்ளது. கோபமும் எரிச்சலும் கூட இவைகளுடன் இணைபிரியாமல் உள்ளது. கோவில் குளம் பக்தி இவையெல்லாம் கொஞ்ச நாட்கள் முன்புவரை ஓரளவுக்கு இருந்தது. தற்போது ஐயாவாள் ஆன்மீகத்தில் அதிக அளவில் ஆர்வம் காட்டுவதால் (ஆன்மீகம்னா என்னாங்க?) பக்தி மார்கத்தில் செல்வது மிகவும் குறைந்துவிட்டது. நான் ஓரளவுக்கு பாடுபவன் (பாடுபடுபவன் இல்லை, ஹிஹிஹி). எனவே சினிமா பாடல்களை பாடுவது போல உணர்ந்து பக்தி பாடல்களையும் பாடுவேன், அவ்வளவே. ஆன்மிகம் என்று பேசும்போது, தவத்தை பற்றி பேசாமல் இருக்கமுடியாது. ஆன்மீகத்தின் இன்னொரு இரட்டை சகோதரனே தவம். தியானம் என்றும் இதை சொல்லலாம். இப்படித்தான் தவம் செய்யவேண்டும் என்பது கிடையாது. பல முனிவர்கள், பல ஞானிகள், பல சித்தர்கள் பலவித தவ முறைகளை வகுத்துத் தந்து சென்றார்கள். ஒருவரது மூச்சினையோ அல்லது ஒளியையோ அல்லது வேறு ஒரு குறிப்பிட்ட பிம்பத்தையோ உருவத்தையே ஒருமுகத்துடன் கூர்ந்து ஓர்ந்து கவனிப்பது தவம். அப்படியின்றி எந்த ஒன்றையும் கவனிக்காமல், வெறுமனே அமைதியில் உட்கார்ந்திருப்பதுவும் தவம் தான். எந்த தவத்தையும்செய்கையில்ஒருவரது எண்ண அலைகள் சுழன்று வந்தவண்ணம் இருக்கும். பலருக்கு நிறைய எண்ணங்கள் வந்து செல்லும். சிலருக்கு சில எண்ணங்கள் வந்து செல்லும். எண்ணங்கள் குறையக்குறைய தவத்தின் பயன் கிடைக்கும். சொல்லப்போனால், ஒருவர் ஒரு மணிநேரம்தியானம்செய்கையில், சாதாரணமாக மனதில் ஓடும் ஐநூறு எண்ண அலைகளுக்கு பதில் ஐம்பது எண்ண அலைகள் மட்டுமே ஓடுமானால் அந்த மனிதர் தவத்தின் பயனை அதிகம் பெறுகிறார் என்று பொருள். நம்முடைய நினைப்புமற்றும்எண்ணங்கள்தானே நம்மை இந்தப்பாடு படுத்துகிறது. 14 – 40 எண்ண அலைச்சுழலிருந்து (பீட்டா எண்ண அதிர்வு அலை) எண்ணங்களின் ஓட்டம் 8–13க்கு (யடகய, ஆல்பா எண்ண அதிர்வு அலை) வந்துவிட்டால், அந்த மனநிலையில் மனதிருப்தியும் அமைதியும் அமைகின்றன. இந்த நிலையிலிருந்துகொண்டே தவம் செய்பவருக்கு இந்த எண்ண அதிர்வு அலை 4 –7 வரையில் கூட செல்ல வாய்ப்பிருக்கிறது. இந்த நிலை, ஒருவர் இன்னும் ஆழமான அமைதியுடனும் பக்குவப்பட்ட மனதுடன் இருக்கிறார் என்று பொருள்.

இப்போது என் விஷயத்திற்கு வருவோம். நானும் கடந்த இருபத்திஐந்து வருடங்களுக்கு மேலாக ஏதோ ஒரு வகையில் தவம் செய்து வருகிறேன். இருபத்தி ஐந்து வருடங்களாக தவம் செய்யும் இவர் என்ன தவ முனிவரா என்றெல்லாம் எண்ணி பயப்படவேண்டாம். வாரத்தில் ஐந்து நாட்கள் வரை, சராசரி அரை மணி நேரம், நான் தவம் செய்வதில் ஈடுபடுகிறேன். இடையில் சில வருடங்கள் தவம் ஏதும் செய்யாமலிருந்தேன். இந்நாட்களில், தினமும் இரண்டு முறை தவத்திற்கென அமருகிறேன்.

இவ்வளவு செய்தும் என் தற்போதைய நிலைமையை கொஞ்சம் புட்டு வைக்கட்டுமா?

1. தவத்தில் நான் அமரும்போது மற்ற யாரையும் சங்கடப்படுத்துவதில்லை.

2. அந்த நேரத்தில் நான் மௌனமாக இருக்கிறேன்.

3. என்ன அலைகள் வந்து கொண்டிருக்கிறது, சென்று கொண்டிருக்கிறது.

4. தெய்வீகம், பரவசநிலை போன்ற அனுபவங்கள் எனக்கு இதுவரை கிட்டவில்லை.

5. தவம் செய்தபிறகு சாந்த நிலை எப்போதும் இருக்கும் என்று சொல்லமுடியாது. சில நேரங்களில் தவம் செய்யும்போதே ஒருவித அதிருப்தியும் எரிச்சலும் கூட இருக்கும்.

6. சரியான தூக்கம் அமையவில்லையெனில் தவம்சரியாக இருக்காது. தூக்கக்கலகத்துடன்தான் தவமும் இருக்கும்.

7. ஓரளவுக்கு ஆரோக்கியமான உடல்நலம் இருந்தால்தான், தவம்செய்யும்எண்ணமே வரும். மூச்சுவிட முடியாமல், இருமிக்கொண்டு, தொண்டையை கனைத்துக்கொண்டு இருப்பவர்கள் நிச்சயமாக ஆழ்ந்த தவத்தில் ஈடுபட முடியாது.

8. தவம் செய்வதால் ஒருவருக்கு வாழ்க்கை நன்றாக அமையும் அல்லது தவம் செய்தால் நிறைய நன்மைகள் ஏற்படும் என்பதெல்லாம் ஒரு குறிப்பிட்ட சிலருக்கு நிகழலாம். ஆனால் பொதுவாக இவையெல்லாம் அமைவதில்லை.

9. ரேடியோ, டிவி, அக்கம்பக்கத்தில் பேச்சு இவையெல்லாம் தவத்தினை பாதிக்கும் (தவத்தில் அதிகமான பயன்களை பெற்ற வெகு சிலரைத்தவிர). நான் தவத்தில் இருக்கும்போது என்வீட்டிற்கு எவரேனும்வந்துசென்றால், அவர் பேசுவது எல்லாமே எனக்கு நன்றாக கேட்கும். நான் தவத்தை முடித்தவுடன் என் மனைவி "பக்கத்து வீட்டிலிருந்து இன்னார் வந்து சென்றார்" என்று சொன்னால் நான் ' தெரியுமே" என்று நான் சொன்னவுடன் கொஞ்சம் ஆச்சரியமாக பார்ப்பாள். முன்பெல்லாம் அவளுக்கு தவம் செய்வது ஒரு பயம் தரும் செயலாக இருந்தது. ஆனால், நன்றாக பழகி, இப்போது தனது சுவாசத்தை மட்டுமே கவனிக்கும் தவத்தில் ஆழமாக சென்றுவிடுகிறாள். எனக்கு இந்த அளவுக்கு தவம் ஆழமாக இருப்பதில்லை என்பதை பணிவுடன் ஒப்புக்கொள்கிறேன்.

10. தவம் செய்வதால் ஒருவர் தவம் செய்யத்தவரைவிட உயர்ந்தவர் என்பதெல்லாம் தப்பான எண்ணம். சொல்லவேண்டுமெனில், தவம் என்றால் என்ன என்றே தெரியாத சிலர் வருடக்கணக்கில் தவம் செய்பவர்களைக்காட்டிலும் நிதானமாக பொறுமையுடன் செயல்படுவதையும் நான் பார்த்திருக்கிறேன்.

கூட்டி கழித்து பார்க்கையில் எவருக்கு தவம் அமையவேண்டுமோ அவருக்குத்தான் நல்ல தவம்செய்யும்பொறுமையும் ஆற்றலும் உள்ளது. பொதுவாக, ஆழ்ந்த தவம் செய்பவர்கள் மற்றவர்களைக்காட்டிலும் ஓரளவுக்கு சிந்தித்து பொறுமையுடன் செயல்படுபவர்களாக இருக்கிறார்கள். ஏனெனில் பொறுமைக்கு இன்னொரு பெயர்தான் தவம்.

எங்கேயோ ஆரம்பித்து எங்கேயோ போய்விட்டேன். நான் சொல்ல வருவது என்னவென்றால், மேலே குறிப்பிட்ட ஆறு 'உ' க்களும் ஒருவருக்கு அமைந்தால் கூட, வாழ்க்கை அமைதியாகவும் சந்தோஷமாகவும் உள்ளது என்று சொல்ல முடியாது. அதாவது, பொருளை பணத்தை கடந்து ஒருவரது உடல் நலம் மற்றும் மன வளமும் உண்மையான அமைதியைப்பெற தேவையானவை. எனவே நல்ல உடல்நலனுக்கு நல்ல உடற்ப்பயிற்சியுடன் நல்ல உணவை சாப்பிட வேண்டும். மன நலத்திற்காக, நல்ல சிந்தனைகளுடன், தவமும் விருப்பமுடன் ஆழ்ந்து செய்து வந்தால் அது பயனளிக்கக்கூடியதாக இருக்கும் என்பது என் கணிப்பு. களவையும் கற்று மற என்றார்கள். நான் சொல்வது தவத்தையும் கற்று மற. தவத்தை அல்ல, மனதில் பாய்ந்து சென்றுகொண்டிருக்கும் அபரிமிதமான, குறிப்பாக எதிர்மறை விளைவிகளைத்தரும் எண்ணங்களை மறைத்து வைக்காமல் மறக்கவேண்டும். அது அவ்வளவு சுலபம் அல்ல. பத்தாவது வாய்ப்பாடு வேண்டுமானாலும் மறந்துவிடலாம். ஆனால் மனதில் ஆழமாக பதிந்த எண்ணங்களை, அதுவும் நம் உடம்பில் உள்ள தழும்புகள் போன்ற கவலையை விளைவிக்கும், பயத்தை தரும் நிகழ்ச்சிகளை அதட்டி ஒடுக்கி வைக்கலாம். ஆனால், அவைகளை மனதிலிருந்து விரட்டமுடியுமா அல்லது ஒரேடியாக கொல்லமுடியுமா என்றால் அது முடிந்தும் முடியாத ஒரு முயற்சியாகத்தான் இருக்கும் என்பது அனுபவத்தில் விளைந்த எனது கருத்து.

# வடக்கு மாகாண திணைக்களம் ஒன்றில் ஊழல் முறைகேடு

கொழும்பு, நவ. 19

வடக்கு மாகாண திணைக்களம் ஒன்றில் இடம்பெற்ற ஊழல் முறைகேடு தொடர்பில் ஊடகவியலாளர் வர்ணன் முன்வைத்த முறைப்பாடு தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் புலன் விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை ஆரமபித்துள்ளது.

விசாரணைக்கு ஏதுவாக கொழும்பில் உள்ள இலஞ்சம் மற்றும் ஊழல் புலன் விசாரணை குழுவில் நேற்று திகட்கிழமை இரண்டு மணித்தியாலங்கள் ஊடகவியலாளர் வர்ணனிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

வடக்கில் பொதுமக்கள் பணத்தினை வீண்விரயம் செய்த அதிகாரிகள் தொடர்பில் தகவல் அறியும் உரிமை சட்டம் மற்றும் கணக்காய்வு அறிக்கைகள் மூலம் பெறப்பட்ட ஆதாரங்களின் அடிப்படையில் இரண்டு மாதங்களுக்கு முன்பு வடக்கில் உள்ள இரண்டு அமைச்சு ஒரு திணைக்களம் உட்பட நான்கு முறைப் பாடுகளை இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட்டது.

அதன் பிரகாரம் முதலாவது முறைப்பாடு தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு தனது விசாரணைகளை ஆரம்பிப்பதாகவும் முறைப்பாடு தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக கொழும்பு ஜாவத்தையில் உள்ள இலஞ்சம் மற்றும் ஊழல் புலன் விசாரணை ஆணைக்குழுவில் வாக்குமூலம் வழங்குவதற்காக இன்று திங்கட்கிழமை தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் மூலமாக அழைப்பு விடுக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் குறித்த திணைக்களம் தொடர்பிலும் அதன் தகவல் அலுவலர் மீதும் இரண்டு மணித்தியாலங்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளார். (ஐ)

# குருகொட ஓயாவில் இளைஞன் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 19

ஐரோப்பிய நாடு ஒன்றிற்கு செல்ல காத்திருந்த இளைஞன் உயிரிழந்துள்ளார்.

கேகாலை, தெதிகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குருகொட ஓயாவில் தவறி விழுந்து காணாமல் போன இளைஞரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெதிகம பொலிஸார் தெரிவித்தனர்.

தெதிகம பிரதேசத்தை சேர்ந்த அஷான் பிரபோத என்ற 27 வயதுடைய திருமணமாகாத இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அடுத்த மூன்று வாரங்களுக்குள் ருமேனியாவில் வேலைக்குச் செல்லத் தயாராக இருந்ததாக விசாரணையில் தெரியவந்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல், உயிரிழந்த இளைஞர் உட்பட ஒன்பது பேர் கொண்ட குழுவினர் ஒரு இளைஞனின் பிறந்தநாளை கொண்டாடுவதற்காக சென்றுள்ளனர்.

அங்கு நீராடச் சென்ற போது அஷான் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார். இரவு வரை தேடியும் அவரை கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளதென பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் நேற்று காலை காணாமல் போன பகுதியில் இருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் சடலம் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

# பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம்

கொழும்பு, நவ. 19

பொலிஸ் உயர் அதிகாரிகள் பலர் இடமாற்றம் செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த வார இறுதிக்குள் இந்த இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. உதவி பொலிஸ் அத்தியட்சர்கள் முதல் சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் வரையிலான பதவி நிலைகளை வகிக்கும் அதிகாரிகள் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட உள்ளனர். இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட உள்ள அதிகாரிகள் தொடர்பிலான பட்டியல் பொதுப்பாதுகாப்பு அமைச்சினால் தேசிய பொலிஸ் ஆணைக்கழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த பரிந்துரைகள் தொடர்பில் தேசிய பொலிஸ் ஆணைக்குழு எதிர்வரும் 20ஆம் திகதி தீர்மானம் எடுக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்ட அதிகாரிகள், மூன்றாண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் கடமையாற்றிய அதிகாரிகள், வினைத்திறன் இன்றி செயற்படும் அதிகாரிகள் ஆகியோர் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட உள்ளனர்.

மேல்மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதவியிலும், பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பொறுப்பதிகாரி பதவியிலும் மாற்றம் செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த உயர் அதிகாரிகளுக்கான இடமாற்றத்தின் பின்னர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளும் இடமாற்றம் செய்யப்பட உள்ளனர். (ஐ)



# இந்தியாவில் மணிப்பூரில் மீண்டும் வன்முறைகள்: குழந்தைகள் உட்பட்ட 6 பேரின் உடலங்கள் மீட்பு



இந்தியாவின்வடகிழக்குமாநிலமான மணிப்பூர், பெரும்பான்மையான மெய்தி சமூகத்தைச் சேர்ந்த ஆறு பெண்கள் மற்றும் குழந்தைகளின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து, அங்கு பாதுகாப்பு செயற்பாடுகளை அதிகாரிகள் தீவிரப்படுத்தியுள்ளனர் சிறுபான்மை குக்கி குழுவைச் சேர்ந்தவர்களால் கடத்தப்பட்டதாக இந்த 6 பேரும் கொல்லப்பட்டுள்ளதாக மெய்தி குழுக்கள் குற்றம் சாட்டியுள்ளன.

எனினும், இதனை பொலிஸார் உறுதிப்படுத்தவில்லை. கடந்த வார இறுதியில் மீண்டும் ஆரம்பமான வன்முறைகள் காரணமாக, மாநிலத்தின் சில பகுதிகளில் இணைய சேவைகளை முடக்க அதிகாரிகளை நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

கடந்த மே மாதம் முதல் இரு இனக்குழுவினரும் மோதல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், இதுவரை 200 பேர் வரை பலியாகி ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

கடந்தசனிக்கிழமையன்று, வன்முறையாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்களின் வீடுகள் மற்றும் அலுவலகங்களை சூறையாடி அவற்றுக்கு எரியூட்டினர். கலவரத்தை அடுத்து, மத்திய அரசு உயர் பாதுகாப்பு அதிகாரிகள் மாநிலத்திற்கு விரைந்துள்ளனர்.

2024 நவம்பர் 7ஆம் திகதியன்று மாநிலத்தின் ஜிரிபாம் மாவட்டத்தில் குக்கி சமூகத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை ஆயுதம் ஏந்திய குழுவைச் சேர்ந்தவர்கள் பாலியல் பலாத்காரம் செய்து தீ வைத்து எரித்ததை அடுத்து மீண்டும் வன்முறைகள் ஆரம்பித்தன.

இதன்போது, மெய்தி அகதிகள் தங்கியிருந்த நிலையம்மற்றும்நிவாரண முகாம்தாக்கப்பட்டது.

இந்த தாக்குதலுக்கு குக்கி குழுக்கள் தான் காரணம் என்று பெரும்பான்மை சமூகம் குற்றம் சாட்டியது மணிப்பூரில் இம்பால் பள்ளத்தாக்கில் மெயதீஸ் இனத்தினர் வாழ்கின்றனர். அதனை சுற்றியுள்ள மலைப் பகுதிகளில் குக்கிகள் வாழ்கின்றனர்.

(ஐ)



# இடிந்து வீழ்ந்த இரணைமடுக் குளத்தின் கொங்கிறீட் சுவர்







கிளிநொச்ச, நவ. 19

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் கடந்த 2018ஆம் ஆண்டு இபாட் திட்டத்தின் கீழ் பிரதான நீர்ப்பாசன வாய்க்காலில் அமைக்கப்பட்ட கொங்கிறீட் சுவர் உரிய முறையில் அமைக்கப்படாத நிலையில் தற்போது இடிந்து வீழ்ந்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடு குளத்தின் கீழ் கடந்த 2015முதல்2018ம் ஆண்டுவரை இபாட் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டுமான வேலைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை என விவசாயிகளால் ஏற்கனவே குற்றம் சாட்டி வருகின்றனர்.

இந்தநிலையில், முரசுமோட்டை ஊரியான் ஆகிய பகுதிகளுக்கு நீரை கொண்டு செல்லும் பிரதான வாய்க்காலில் 2018ஆம் ஆண்டு இபாட் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கொங்கிறீட் சுவர்கள் உரிய முறையில் அமைக்கப்படாத நிலையில் தற்போது குறித்த கொங்கிறீட் சுவர்கள் இடிந்து வீழ்ந்துள்ளன.

இதனை விட பன்னங்கண்டி மற்றும் கோரக்கண் கட்டு ஊரியான் மேற்கு ஆகிய பகுதிகளுக்கு நீரை கொண்டு செல்லும் பிரதான வாய்க்காலில் தற்போது புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கொங்கிறீட் சுவர் உரிய முறையில் அமைக்கப்படாது சுவர்களில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு பெருந்தொகை நிதிகளை செலவிட்டு மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படுவதில்லை என்றும் இது தொடர்பாக விவசாயிகள் பல தடவை சுட்டி காட்டிய போதும் துறைசார் அதிகாரிகள் அசம்பந்தப் போக்கை காட்டி வருவதாகவும் விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஐ)

வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்



# தமிழ்க்கட்சிகள் விளங்கிக்கொள்ள வேண்டிய எளிமையான பேருண்மைகள்

தமிழ்த் தேசியப் பிரதிநிதித்துவம் படிப்படியாகக் குறைவதைத் தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. கடந்த நாடாளுமன்றத்தில் 13 ஆசனங்கள். இந்த முறை ஒன்பது ஆசனங்கள்.

மருத்துவர் அர்ஜ/னாவின் அரசியல் நிலைப்பாடுகள் ஸ்திரமானவை அல்ல. எனினும் அவரையும் இணைத்துக் கொண்டால் பத்து ஆசனங்கள். தமிழ்த் தேசியத் தரப்புக்குக் கிடைக்காத ஆசனங்கள் தமிழ்த் தேசிய பரப்புக்கு வெளியே போயிருக்கின்றன. வடக்கில் மொத்தம் ஐந்து என்பிபி வேட்பாளர்களும் கிழக்கில் இரண்டு என்பிபி தமிழ் வேட்பாளர்களும் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

கடந்த நாடாளுமன்றத்தில் டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இருவரும் வடக்கிலிருந்தும், பிள்ளையான் கிழக்கில் இருந்தும் சென்றார்கள். மூன்று வேறு கட்சிகளைச் சேர்ந்த மூன்று தமிழ் பிரதிநிதிகள். இப்பொழுது ஒரே தென்னிலங்கைக் கட்சியைச் சேர்ந்த ஏழு பேர். என்பிபி இனப்பிரச்சினையைத் தீர்க்கும் என்று நம்பி தமிழ் மக்கள் அதற்கு வாக்களிக்கவில்லை.

பிரதான தமிழ்த் தேசியக் கட்சிகள் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டத் தவறியதன் விளைவே அது. தமிழ்ச் சமூகமானது ஒருவர் மற்றவரை நம்பாத் தன் பலத்தை தானே நம்பாத் ஒருவர் மற்றவரை சந்தேகத்தோடு பார்க்கின்ற் ஒருவருக்கு எதிராக மற்றவர் சூழ்ச்சிக் கோட்பாடுகளைப் புனைகின்ற் சமூகத்தில் மினுங்கிக் கொண்டு தெரியும் ஒருவரை சந்தேகத்தோடு வெறுப்போடு அணுகுகின்ற் வெறுப்பர்கள் அதிகம் நிறைந்த் கூட்டுணர்வு குறைந்த் தாய் நிலத்தை விட்டுப் புலம்பெயரும் வேட்கை மிகுந்த ஒரு சமூகமாக மாறி வருகின்றது.

அவ்வாறு தூர்ந்து கொண்டு போகும் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசிய அரசியலுக்கு உண்டு. தன் பலம் உணர்ந்து ஒருவர் மற்றவரை நம்பிக்கையோடு பார்க்கின்ற் உருகிப்பிணைந்த ஒரு திரட்சியாக தமிழ் மக்களைத் திரட்ட வேண்டிய பொறுப்பு தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு உண்டு.

ஆனால் தேசியவாத அரசியல் என்றால் மக்களைத் திரளாக்குவதுதான் என்ற எளிமையான பேருண்மையை விளங்கிக் கொள்ளாத அல்லது அதை விளங்கிக் கொள்ளத் தேவையான பண்பாட்டு இதயத்தைக் கொண்டிராத் தேசிய கூட்டுணர்வைக் கொண்டிராத, பிரதான தமிழ்த் தேசியக் கட்சிகளின் தோல்வியின் விளைவே, அதிகரித்த சுயேச்சைகளும் கட்சிகளும் ஆகும்.

இதனால் ஏற்பட்ட சலிப்பினாலும் விரக்தியினாலும் வெறுப்பினாலும் ஒரு பகுதி தமிழ் வாக்காளர்கள் என்பிபியை நோக்கிப் போனார்கள். நாடாளுமன்றத்தில் என்பிபி பெற்றிருக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்பது திருப்பகரமான மாற்றங்களைச் செய்யப் போதுமான ஒரு பெரும்பான்மை.

அப்படிப் பார்த்தால் என்பிபி இனப்பிரச்சனைக்கான தீர்வு தொடர்பில் புரட்சிகரமான முடிவை எடுக்குமா? அல்லது மகாவம்ச மனோநிலையின் கைதியாக மாறி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் தானே தோற்கடிக்குமா?

இலங்கைத் தீவியின் எந்த ஒரு தேர்தல் வெற்றியும் எப்பொழுது முழு வெற்றியாக மாறுகிறது என்றால், இனப்பிரச்சினையைத் தீர்க்கும் போதுதான். என்பிபி கருதுவதுபோல இனப்பிரச்சினை, ஒரு மனிதாபிமானப் பிரச்சினையல்ல. அது இலங்கைத் தீவின் பல்லினத்தன்மையை ஏற்றுக்கொள்ளாமையின் விளைவுதான்.

இச்சிறிய தீவில் ஒன்றுக்கு மேற்பட்ட தேசங்கள், தேசிய இனங்கள் உண்டு என்பதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழ் மக்களை இறைமையும் சுய நிர்ணய உரிமையும் கொண்ட ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொண்டு, இலங்கைத் தீவின் அரசுக் கட்டமைப்பை பல்லினத் தன்மை கொண்ட ஒன்றாகக் கட்டமைக்க வேண்டும். அவ்வாறான அடிப்படை மாற்றம் ஒன்றைச் செய்வதற்கு என்பிபி தயாரா? இப்போதிருக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதைச் செய்யப் போதுமானது.

அதேசமயம் இம்முறை தேர்தல் முடிவுகளில் தமிழ்த் தேசிய நோக்கு நிலையில் நம்பிக்கையூட்டும் விடயங்கள் எவை என்று பார்த்தால்,கிழக்கில் பிரதேச வாதத்தை முன்வைக்கும் பிள்ளையான் தோற்று விட்டார்.

அது பெரிய வாக்கு வித்தியாசத்தில் கிடைத்த தோல்வியல்ல. சில நூறு வாக்குகள் வித்தியாசத்தில் கிடைத்த தோல்விதான். சங்குக்கு யாழ்ப்பாணத்தில் கிடைத்த தோல்வி போல. எனினும், தேர்தல் கணக்கில் அது தோல்வி. கிழக்கில் தமிழரசுக் கட்சிக்கு ஐந்து ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. இது கிட்டத்தட்ட ஒன்றரை மாதத்துக்கு முன் நடந்த ஜனாதிபதி தேர்தலில் தாயக ஒருமைப்பாட்டிற்குக் கிடைத்த வெற்றியின் அடுத்த கட்ட வளர்ச்சி. ஜனாதிபதித் தேர்தலில் கிழக்கிலிருந்து கொண்டுவரப்பட்ட ஒரு வேட்பாளருக்கு வடக்கில் மட்டும் ஒரு லட்சத்து ஐம்பதாயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் கிடைத்தன. நாடாளுமன்ற தேர்தலில் கிழக்கு மைய பிரதேச வாதத்துக்கு தலைமை தாங்கும் அரசியல்வாதி தோல்வியுற்றிருக்கிறார். ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, தாயக ஒருமைப்பாட்டை நிஷரூபித்தது. நாடாளுமன்றத் தேர்தலில் கிழக்கு தாயக ஒருமைப்பாட்டை நிஷரூபித்திருக்கிறது.

வடக்கையும் கிழக்கையும் பிரித்த ஜேவிபிக்கு வடக்கு கிழக்கில் 7 ஆசனங்கள் கிடைத்திருக்கும் ஒரு பின்னணியில் கிழக்கில் தாயக ஒருமைப்பாட்டுக்கான பலமான மக்கள் ஆணை கிடைத்திருக்கிறது.

மேலும், தமிழரசுக் கட்சி அதிகம் ஆசனங்களை பெற்ற ஒரு தனிக் கட்சியாக மேலெழுந்திருக்கிறது. கடந்த முறையைவிட இந்த முறை இரண்டு ஆசனங்கள் அதிகம். ஒரு கட்சியாக அந்த வெற்றியைக் கொண்டாடலாம். ஆனால் தேசத்தைத் திரட்டுவது என்பது கட்சியைப் பலப்படுத்துவது மட்டும் அல்ல. கடந்த நாடாளுமன்றத்தோடு ஒப்பிடுகையில் மொத்த தமிழ் தேசியப் பிரதிநிதித்துவத்தில் மூன்று ஆசனங்கள் இழக்கப்பட்டமை வீழ்ச்சி.

என்பிபி யாழ்ப்பாணத்தில் அதிக ஆசனங்களை வென்றிருக்கிறது. கிழக்கிலும் அதற்கு ஆசனங்கள் கிடைத்துள்ளன. அவை தமிழ்த் தேசிய அரசியலின் தோல்விகள். இந்தத் தோல்விகளுக்கு ஊடாகப் பார்த்தால் தமிழரசுக் கட்சி பெற்ற வெற்றியைக் கொண்டாட முடியாது.

ஆனால் சுமந்திரன் கட்சியின் வெற்றியைக் கொண்டாடுகிறார். கடந்த ஒரு தசாப்தத்துக்கும் மேலாகத் தமிழரசியலைத் தீர்மானிக்கும் சக்திபோல செயற்பட்ட சுமந்திரனும் இந்தத் தோல்விக்குப் பொறுப்பு. அதற்குரிய தண்டனையை வாக்காளர்கள் அவருக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஒட்டுமொத்தத் தமிழ்த் தேசிய அரசியலில் பின்னடைவை ஏற்படுத்திவிட்டு கட்சி பெற்ற சிறு வெற்றியை எப்படிக் கொண்டாட முடியும்? ஏனைய கட்சிகள் இல்லாமல் தனிக் கட்சியாக வெல்ல முடியும் என்று மார்தட்டுவதே தேசியவாத அரசியலுக்கு, தேசத் திரட்சிக்கு எதிரானது. (ஐ)





